**தலைப்பு 195 – திறமுறை அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, திறமுறை அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு நோக்கெல்லை**

---

தலைப்பு 195 – திறமுறை அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஜூலை 11 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக திறமுறை அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளது. இவை அவதானிக்கப்பட்டன.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 127(1) பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செயற்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதி செயற்பாடுகளும் திட்டமிடப்படல். | 1. செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2.1.1 |
| | | 2. பெறுகை நடவடிக்கை போதியளவில் திட்ட மிடப்படாமை. | 2.2.1 |
| | | 3. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப் படாமை. | 2.9 |

| | | | |
|---|---|---|---|
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஏற்பாடுகள் தயாரிக்கும் முறைமை ஒன்று தயாரித்து கொள்ளல். | 1. இணக்கமின்மைகள்<br>2. மனித வள முகாமைத் துவத்தில் பலவீனங்கள்<br>3. முகாமைத்துவப் பலவீனங்கள் | 2.10<br>2.11<br><br>2.6 |
| 127(2) | தனது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங் களில் அப்போதைக்கு இருக்கும் செலவு விடயங்கள் உட்பட புதிதாக அல்லது மிகையாக செலவிடுவதற்கான பிரேரணைகள் சிக்கனமாகவும் மற்றும் செயற்திறனாக அமைச்சில் கூர்மையான பரிசோதனை மேற்கொள்ள ப்பட வேண்டும். | பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.2.2 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத் தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்ற தெனவும் | 1. எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்யாமை.<br>2. ஏனைய நிறுவனங் களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்.<br>3. கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்.<br>4. வருடாந்த பண்டக் கணிப்பீடு நடத்தப் படாமை. | 2.3(அ)<br>2.3(இ)<br>2.3(ஈ)<br>2.3(ஆ) |

| | | | |
|---|---|---|---|
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக் கப்படுகின்றன எனவும் மற்றும் தாம் அவற்றில் கையொப்ப மிடுவதற்கு முன்னர் அமைச்சி னால் பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவின த்திற்கு இடையே கருத்தில் கொள்ளக் கூடியளவு வேறுபாடுகள் தம்மால் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்படல். | 1. வருடாந்த பாதீட்டு எல்லையை விஞ்சி கட்டுப்பாடுகளுக்கு உட்படல்<br>2. கட்டுநிதி முற்பணங் கள் தீர்ப்பதில் தாமதம் | 2.4<br>2.8 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடு களில் நிதி ஏற்பாடு மற்றும் செலவினத்திற்கிடையே கருத்தில் கொள்ளக் கூடியளவு வேறுபடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | --- | --- |

| | | | |
|---|---|---|---|
| 127(7) | உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டங்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரை பிரமாணங்களில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர் களினால் கடைபிடிக்கப் பட்டதாகவும், நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்த நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோ கத்தர்கள்/ ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிப்பதற்கும், கண்காணி க்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருப்பின் தனக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும் அரசாங்க கணக்கு குழுவின் முன் தோன்றுவதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவு படுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருடன் ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்த ரின் கடமைகளுக்கு பொறுப்பாகுதல். | நட்டங்களும் சேதங்களும் | 2.5 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

**திட்டமிடல்**

2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த முக்கிய கடமைகள் 26 காணப்பட்டதுடன், அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள 04 நியதிச் சட்ட நிறுவனங்களின்,

எதிர்பார்த்த விளைவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) நிறுவனத்தின் அமைப்புக் கட்டமைப்பு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போது சேவையிலுள்ள பதவியணியினர் தொடர்பான விபரங்கள் மீளாய்வாண்டின் போது நாளது வரை ஆக்கப்பட்டிருந்த போதிலும் அவ்விடயம் செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கியிருக்கவில்லை.

(ii) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் வருட இறுதியில் மீண்டும் திருத்தத்திற்கு ஆளாக்கியிருந்த போதிலும் திறைச்சேரிக்கு அறிவித்திருக்காமையால் ஆரம்ப செயல் நடவடிக்கை திட்டத்தின் மீது அங்கீகரிக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் திருத்தப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திருத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) ஆரம்ப செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள திட்டமிட்ட செயற்பாடு ஒன்றினை நிறைவேற்றுவதற்கு மாத்திரம் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் திருத்திய செயல் நடவடிக்கைத் திட்டத்தில் செயற்பாடுகள் எதற்கும் கிரயம் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(iv) வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம் (Imprest Requirement Plan) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் நிறைவேற்றல்**

--------------------------------------------------------------------------------------------

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.
நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகள் ''2030 வருட நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் அமைச்சினால் தமது நோக்கெல்லையினை நெருங்க வேண்டிய குறிக்கோளாக நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் ஆன குறிக்கோள்கள் 8,9 மற்றும் 17 இனங்கண்டிருந்தது. அவ்வாறாயினும் அமைச்சின் நோக்கெல்லையின் கீழ்வரும் ஏனைய குறிக்கோள்கள் தொடர்பாக முழுமையான பகுப்பாய்வு ஒன்று அமைச்சின் உயர்மட்ட முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

செயலாற்றுகையை அளவிடுவதற்காக சரியான தரகு முறைமையொன்று காணப்படல் கட்டயாக இருந்த போதிலும், நிறுவனத்தினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நெருங்குவதை அளவிடுவதற்காக சரியான தரவு ஒன்றினை உருவாக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.2 பெறுகை செயல் முறையினூடாக பொருட்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ளல்

--------------------------------------------------------------------------------------------

அமைச்சினால் அரச கொள்வனவு வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட்டு மற்றும் சேவைகள் பெறப்பட வேண்டிய ரூபா 45.38 மில்லியன் இற்கான ஏற்பாடுகள் வழங்கியிருந்ததுடன் அவற்றில் ரூபா 42.88 மில்லியன் இற்கான ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவு விடயம் | செலவு விடய விபரம் | வழங்கப்பட்டிருந்த தேறிய ஒதுக்கீடு | பயன்பாடு | சேமிப்பு |
|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| | <u>வழங்கல்கள்</u> | | | |
| 1201 | காகிதாகிகள் மற்றும் அலுவலக தேவைகள் | 3.00 | 2.98 | 0.02 |
| 1203 | உணவு பானம் மற்றும் சீருடை | 0.38 | 0.34 | 0.04 |
| 1205 | ஏனையவை | 0.20 | 0.20 | - |
| | மூலதன சொத்துக்கள் உரித்தாக்கல் | | | . |
| 2101 | வாகனங்கள் | 36.00 | 35.28 | 0.72 |
| 2102 | தளபாடங்கள் அலுவலக உபகரணங்கள் | 2.80 | 2.19 | 0.61 |
| 2103 | இயந்திரங்கள், இயந்திர உபகரணங்கள் | 3.00 | 1.89 | 1.10 |
| | மொத்தம் | 45.38 | 42.88 | 2.49 |

**2.2.1 பெறுகைத் திட்டமிடல் மற்றும் ஆரம்ப நிலை**

அமைச்சுக்கு மீளாய்வாண்டின் போது பெறுகைகள் செயல்முறையின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகள் நிறைவேற்றிக் கொள்வதற்கான ரூபா 45.38 மில்லியன் ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 42.88 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் தொடர்பாக பிரதான பெறுகை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. வருடாந்தம் திட்டமிடப்பட்ட பெறுகை விடயங்கள் தொடர்பாக விபரங்கள் அடங்கியிருக்கவில்லை. அதே போல் பெறுகைகள் பெக்கேஜ் பொழிப்பு தயாரித்திருக்காததுடன் ஆரம்ப பெறுகை திட்டமும் தயாரித்திருக்கவில்லை.

**2.2.2 பெறுகை செயல்முறையை செயற்படுத்துவதில் குறைபாடுகள்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) ஹம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் கைத்தொழில் வலயத்தின் அபிவிருத்தி செய்தல் தொடர்பான பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஊடாக விளம்பரம்**

2017 ஆண்டின் போது ஹம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் கைத்தொழில் வலய அபிவிருத்தி செய்தல் தொடர்பாக பொதுமக்களுடைய விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஊடக நிகழ்ச்சித் திட்டமொன்று அமைச்சினால் செயற்படுத்தியிருந்ததுடன் இதற்காக தொலைக்காட்சி, வானொலி மற்றும் பத்திரிகைகள் மூலம் பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக ரூபா 181,853,894 அற்கான (VAT மற்றும் NBT உடன்) தொகை ஊடக நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த பெறுகை விடயம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் அல்லது வருடாந்த பெறுகைத் திட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இந்த விடயத்திற்காக பெறுகை வழிகாட்டல் கோவையில் வழிகாட்டல் 4.3.1 இன் பிரகாரம் மதிப்பீடு ஒன்றும் வழிகாட்டல் 5.6 இன் பிரகாரம் விவரக் குறிப்பும் தயாரித்திருக்கவில்லை.
வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் மற்றும் பெறுகை திட்டத்தின் மூலம் இந்த பெறுகை விடயம் அங்கீரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2014 ஜுலை 04 திகதிய பெறுகை கையேட்டிற்கான பிண்ணிணைப்பு இலக்கம் 28 இன் பிரகாரம் பண்டங்கள் மற்றும் ஆலோசனை சேவை அல்லாத சேவை பெறுகைகளுக்காக சந்தை விலை நிர்ணயிக்கும் முறைமை கடைபிடிக்கும் போது முத்திரையிடப்பட்ட 03 கூறுவிலைகளை விட குறைவில்லாத எண்ணிக்கையினை அழைக்கும் சந்தர்ப்பத்தில் அமைச்சுப் பெறுகை குழுவிற்கான அதிகார எல்லை ரூபா 8 மில்லியன் மாத்திரம் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அமைச்சு அந்த அதிகார எல்லையை மிகைத்து செயற்பட்டிருந்தது.

(iv) இந்த பெறுகை விடயத்திற்காக இணையத்திலுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட 03 நிறுவனங்களில் இருந்து கூறுவிலைகள் அழைத்திருந்த போதிலும் அந்த நிறுவனங்களை தெரிவு செய்யும் போது அரச நிறுவனங்களுக்கு முன்னுரிமைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(v) பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 2.8.1(ஆ) இன் பிரகாரம் தொழிநுட்ப மதிப்பாய்வு குழு குறிப்பிட்ட விடயம் தொடர்பான விஷேடத்து அறிவுடைய ஒருவரை உட்படுத்தியிருக்கவில்லை.

(vi) இந்த விடயத்திற்காக பெறுகைகள் வழிகாட்டல் கோவையில் 5.3 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டுள்ள விலைமனு அழைப்புப் பதிவேடு பயன்படுத்தியதற்கான சான்றுகள் காணப்படாததுடன் பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 6.3.6 இன் பிரகாரம் விலைமனு திறக்கும் அலுவல்கள் குறிப்பிட்ட படிவத்தில் அறிவித்திருக்கவில்லை.

(vii) தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவின் விதப்புரையின் மீது பெறுகை குழுவினால் மேற்கூறிய விடயத்திற்காக ரூபா 16,208,705 இற்கான (VAT மற்றும் NBT இன்றி) ஒப்பந்த வேலை தொகையின் கீழ் தனியார் ஊடக முகவர் நிலையம் ஒன்று தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் பெறுகை வழிகாட்டல கோவையின் வழிகாட்டல் 8.7.1(ஆ) இன் பிரகாரம் இந்த ஒப்பந்தவேலை தொடர்பாக ஏற்கை கடிதம் வழங்கியதற்கான சான்றுகள் காணப்படவில்லை.

(viii) இந்த விடயத்தை நிறைவேற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த முகவர் நிலையத்திற்கு ரூபா 9,704,546 தொகை மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. அதே போல் மீதியான ரூபா 9,149,348 இற்கான பெறுகையின் மூலம் தெரிவு செய்யப்பட்ட முகவர் நிலையத்திற்கு செலுத்தாமல் சேவை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்த ஊடக நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ix) மேற்கூறிய கொடுப்பனவு மேற்கொள்ளும் போது இலத்திரனியல் ஊடக நிறுவனத்தினால் சமர்ப்பித்திருந்த ஒலிபரப்பு காலம் மற்றும் தவணைகள் எண்ணிக்கை தொடர்பாக உறுதிப்படுத்தியதற்கான சான்றுகள் காணப்படவில்லை.

**(ஆ) 30 ஆவது மாடியிலுள்ள அமைச்சினால் அலுவலக அறை பிரித்தல்**

30 ஆவது மாடியில் அமைந்துள்ள அமைச்சில் அலுவலகத்தின் அறைகள் பிரித்தலுக்கான ரூபா 1,129,803 தொகைக்கான பெறுகை விடயத்திற்காக விலைமனுக்கள் திறத்தல் தொடர்பான அலுவல்கள் பெறுகை கைநூலில் 6.3.6 இல் குறிப்பிட்ட படிவத்தில் அறிவிக்கப்பட்டு அவ் அறிக்கை குறிப்புகள் விலைமனு திறக்கும் குழுவின் அங்கத்தவர்களினால் கையொப்பமிட்டிருக்கவில்லை. மேலும் பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.4.6(ஆ) இன் பிரகாரம் ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய தொகையில் குறிப்பிட்ட ஒரு தொகை தடுத்து வைத்திருக்கவில்லை.

**(இ) ஏனைய பெறுகைகள்**

(i) 2016 பெப்ரவரி 16 ஆம் திகதிய 431(1) ஆம் இலக்கங் கொண்ட நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் விமான டிக்கட் கொள்வனவு செய்தல் மற்றும் விமானப் பிரயாணங்கள் ஒழுங்கு செய்யும் அலுவல்களுக்காக சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் கீழ் பதிவு செய்துள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட விமானப் பிரயாண முகவர் நிலையங்களில் இருந்து பெற்றுள்ள திறந்த கூறுவிலைகள் அழைக்கப்பட்டு அரசு செலவிடும் பணத்திற்கு உச்சமட்ட பெறுமதியை வழங்கும் நிறுவனங்களை பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க தெரிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறாயினும், அமைச்சினால் 05 சந்தர்ப்பங்களில் ஒரு நிறுவனத்தில் இருந்து மாத்திரம் கூறுவிலைகள் அழைக்கப்பட்டு விமான டிக்கட் கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,876,200 தொகை செலுத்தியிருந்தது.

(ii) பதவியணிக்காக வெளியே நடத்தப்படும் குழு செயற்பாடுகளுக்கான செயலமர்வு ஒன்றிற்காக அமைச்சின் மனிதவள அபிவிருத்தி தேவைகள் மீதான விவரக் குறிப்பு தயாரிக்கப்பட்டு கூறுவிலைகள் அழைப்பதற்குப் பதிலாக தனியார் நிறுவனம் ஒன்றில் இருந்து சமர்ப்பித்திருந்த பயிற்சி வழங்கும் திட்டத்தின் மீது மூல வளங்கள் பங்களிப்பவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தது. அதே போல் மூலவளங் பங்களிப்புக்காக ரூபா 205,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் மூலவள பங்களிப்பாளர்கள் தெரிவு செய்யும் போது சமர்ப்பித்திருந்த கூறுவிலைகளை மாத்திரம் மதிப்பாய்வு செய்திருந்ததுடன் அரசாங்கத்தில் பதிவு செய்தல், சேவையில் தரங்கள் என மற்றும் நியமங்கள் தொடர்பாக விடயங்களை கவனத்தில் எடுத்ததற்கான சான்றுகள் காணப்படவில்லை.

## 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கீழ்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

**(அ) எரிபொருள் எரிதல் பரீட்சிக்கப்படாமை**

2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சின் வாகனங்களுக்கான எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளல் நடைபெற்றிருக்கவில்லை. அதே போல்

அச் சுற்றறிக்கையின் இணைப்பின் பிரகாரம் செயற்பட்டிருக்காமையினால் எரிபொருள் எரிதல் சிக்கனமாக நடைபெற்றதென உறுதிப்படுத்தப்படவில்லை.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்துதல்**

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கைகள் சுற்றறிக்கையின் 3.1.6 பந்தியின் பிரகாரம் 2018 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சினால் அவ் அறிக்கை 2018 ஜூலை 06 திகதி அதாவது 03 மாதங்களை மிகையான காலம் தாமதித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(இ) ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதமாக பயன்படுத்துதல்**

அமைச்சு ஏனைய தரப்பினருக்கு சொந்தமான 04 வாகனங்கள் முறையான அங்கீகாரம் ஒன்று இன்றி பயன்படுத்தியிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2:07 இற்கான பராமரிப்பு கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதே போல் இலங்கை முதலீட்டு சபைக்குச் சொந்தமான ரூபா 3.69 மில்லியன் கிரயமொன்றினை உடைய 341 மூலதன பண்டங்கள் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அமைச்சினால் பயன்படுத்தப்பட்டு காணப்பட்டது.

**(ஈ) உரித்தாக்கப்படாத சொத்துக்கள் முறையற்ற விதமாக பயன்படுத்துதல்**

பழைய அமைச்சு ஆகிய பெருந்தெருக்கல் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின் கீழ் பதிவு செய்திருந்த 02 மோட்டார் வாகனங்கள் புதிய அமைச்சிற்கு உரித்தாக்கியிருக்கவில்லை.

**2.4 ஈடுபாட்டு பொறுப்புக்களும் பொறுப்புக்களும்**

2017 ஏப்ரல் 27 திகதிய 255/2017 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் மற்றும் நிதிப்பிரமாணம் 94 இன் பிரகாரம் ஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்களுக்க அனுகாமல் இருக்க வேண்டி இருந்ததுடன் அமைச்சு 16 செலவு விடயங்களில் ஏற்பாடுகளின் சேமிப்புக்களை மிகைத்து கூட்டுட்தொகை ரூபா 13,755,774 இற்கான பொறுப்புக்களுக்கு அணுகியிருந்தது.

**2.5 இழப்புக்களும் சேதங்களும்**

அமைச்சில் 2017 ஆண்டின் போது இடம்பெற்றிருந்த 10 வான் விபத்துக்கள் தொடர்பாக திருத்த வேலைச் செலவுகள் ரூபா 2,434,136 தொகை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 2,017,455 இற்கான தொகை காப்புறுதியில் இருந்து தீர்க்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 384,314 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. இந்த தொகையை தீர்ப்பதற்காக அமைச்சு 2018 அக்தோபர் 05 திகதி அளவில் குறிப்பிட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றிற்கு பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர்களிடம் பணம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.6 முகாமைத்துவப் பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உலக வர்த்தக மத்திய நிலையத்தின் மேற்கு கோபுரத்தின் 30 ஆவது மாடியில் 3886 சதுர அடி அமைச்சில் அலுவலகம் நடாத்தப்பட்டிருந்தது. புதிய உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்படாமல் 2017 மார்ச் 15 திகதி முதல் திசெம்பர் 31 தகிதி வரையான காலப்பகுதிக்காக கட்டிட வாடகையாக ரூபா 16.02 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஐக்கிய இராச்சியத்தில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றிய சட்ட மா அதிபர் திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவருக்காக விமானடிக்கட் செலவு மற்றும் விமான டிக்கட் இன் திகதியை மாற்றுவதற்கான செலவுகளாக ரூபா 230,000 தொகையும், சீனா மற்றும் இலங்கை இடையே சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் 6 வது கலந்துரையாடலுக்காக பங்குபற்றிய நிர்மாணவேலைகள் அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர் ஒருவருக்காக ரூபா 650,450 தொகையும், அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது பிரேஸில் இல் நடைபெற்ற செயலமர்வு ஒன்றின் மற்றும் இந்தியாவில் நடைபெற்ற இந்து இலங்கை பொருளாதார மற்றும தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையுடன் தொடர்புடைய நான்காவது சுற்று கலந்துரையாடலில் பங்குபற்றிய அமைச்சின் உத்தியோகத்தர்களுக்காக 2015 மே 15 திகதிய முஅ/01/2015/01 இலக்கங் கொண்ட நிதி அமைச்சு சுற்றறிக்கையின் பிரிவு 03(ஆ) பிரிவின் பிரகாரம் வெளிநாட்டில் மேற்கொள்ளப்பட்ட பிரயாணச் செலவுகள் உட்பட ஏனைய செலவுகளைத் தீர்ப்பதற்காக இடைநேர்ப்படி என ஒரு நாளைக்கு 75 ஐ.அ.டொலர்கள் வீதம் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், அந்த நாட்டில் போக்குவரத்திற்காக செலவான செலவுகள் என முறையே ரூபா 256,078 தொகை மற்றும் ரூபா 137,500 தொகை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

(ஈ) பொருளாதார முகாமைத்துவம் மீதான அமைச்சரவை குழுவின் அங்கீகாரத்தின் கீழ் 2016 ஆண்டின் போது அபிவிருத்திக்கான முகவர் நிலையம் மற்றும் சர்வதேச வர்த்தகம் மீதான முகவர் நிலையம் நிறுவப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிறுவனங்களை அதிகாரமளிக்கும் சட்டம் 2017 திசெம்பர் 31 திகதி வரையும் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்காதுவிடினும் அமைச்சினால் இந்த நிறுவனங்களில் அலுவல்களுக்கு 2016 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 18,348,930 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. இந்த தொகையில் 53 சதவீதம் முகவர் நிலைய குழு அங்கத்தவர்களின் வெளிநாட்டு பிரயாணத்திற்காக செலவிடப்பட்டிருந்தது.

## 2.7 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 5 வருட காலப்பகுதியில் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2014 | மீண்டுவரும் | 125.29 | 99.23 | 26.06 | 20.80 |
| | மூலதன | 48.71 | 42.86 | 5.85 | 11.27 |
| | **மொத்தம்** | **174** | **142.09** | **31.91** | **18.34** |
| 2015 | மீண்டுவரும் | 353.59 | 343.79 | 9.80 | 2.77 |
| | மூலதன | 359.49 | 195.97 | 163.52 | 45.49 |
| | **மொத்தம்** | **713.08** | **539.76** | **173.32** | **24.31** |
| 2016 | மீண்டுவரும் | 565.90 | 537.63 | 28.27 | 5.00 |
| | மூலதன | 473.00 | 177.00 | 296.00 | 62.58 |
| | **மொத்தம்** | **1038.90** | **714.63** | **324.27** | **31.21** |
| 2017 | மீண்டுவரும் | 585.69 | 503.59 | 82.11 | 14.02 |
| | மூலதன | 1379.80 | 550.95 | 828.85 | 60.07 |
| | **மொத்தம்** | **1965.49** | **1054.54** | **910.96** | **46.35** |

**வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தாமை**

(i) 2015, 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளின் போது ஒட்டுமொத்த மூலதன ஏற்பாடுகளில் முறையே 45.49 சதவீதம், 62.58 சதவீதம் 60.07 சதவீதம் பயன்படுத்தியிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது 02 செலவு விடயங்களுக்காக வழங்கியிருந்த ரூபா 0.3 மில்லியனுக்காக மொத்த தேறிய ஏற்பாடுகள் பயன்படுத்தாமல் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் போது 29 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 876.67 மில்லியன் மிகை ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தமையால் செலவு விடயங்கள் தொடர்பாக ஏற்பாடுகளில் கூட்டுத்தொகை ரூபா 571.21 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் சேமிப்பு ரூபா 305.46 மில்லியன் ஆகக் காணப்பட்டது. அவை வழங்கப்பட்டிருந்த தேறிய ஏற்பாடுகளில் 10 சதவீதம் முதல் 93 சதவீத வீச்சு அளவில் காணப்பட்டது.

## 2.8 கட்டுநிதிக் கணக்கு

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஜுலை 14 திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் கருமம் முடிவடைந்த 10 நாட்களுக்குள் பெற்றிருந்த நிமித்த கட்டுநிதிகளை தீர்க்க வேண்டும். எனினும் 05 சந்தர்ப்பங்கள் தொடர்பாக வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 127,500 தொகைக்கான நிமித்த கட்டுநிதி விடயம் முடிவடைந்து 01 மாதம் முதல் 05 மாதங்கள் வரை காலவீச்சில் தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது.

(ஆ) விஷேட கருமங்களுக்காக முற்பணம் வழங்கும் போது எதிர்ப்பார்க்கும் செலவுத் தொகை மிகவும் சரியாக மதிப்பீடு செய்யப்படாமையால் தேவையான அளவை விட ரூபா 136,764 இற்கான மிகைப் பணத்தொகையொன்று முற்பணமாக வழங்கப்பட்டிருந்ததுடன் விடயம் முடிவடைந்த உடன் மீதிப் பணம் தீர்க்கப்படாமல் 07 நாட்கள் முதல் 22 வரை தாமதத்தின் பின்னர் முற்பணம் தீர்க்கப்பட்டிருந்தது.

**2.9 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

அமைச்சினால் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.2.1(அ) பிரகரம் விலைமனு அழைப்புப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**2.10 இணக்கமின்மை**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை | | |
| (i) தாபனக் கோவையின் அத்தியாயம் xii பிரிவு 23.5.1 | - | 03 சந்தர்ப்பங்களில் உத்தியோகத் தர்கள் வெளிநாடு செல்வதற்கு முன்னர் பதில் கடமை ஆற்றுவதற்காக உத்தியோகத்தர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) தாபனக் கோவையின் அத்தியாயம் xv பிரிவு 11.1 | 3,543,600 | 07 உத்தியோகத்தர் 19 சந்தர்ப்பங்களில் சர்வதேச மட்டத்தில் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் களுக்காக வெளிநாடு செல்லும் போது வியாபார வகுப்பு விமான டிக்கட் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

---

| | | |
|---|---|---|
| (i) நிதிப்பிரமாணம் 104(1)(அ),104(3),104(4) | 214,205 | அமைச்சின் 8 வாகன விபத்துக்கள் தொடர்பாக தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 1641 | - | ஒரு வாகனம் பாதுகாப்பற்ற முறையில் திறந்த இடமொன்றில் நிறுத்தி வைத்திருந்த காரணத்தினால் விபத்திற்கு உள்ளாகியுள்ளது. |
| (iii) நிதிப்பிரமாணம் 1645 | - | அமைச்சின் வாகனங்கள் தொடர்பாக சம்பவக் குறிப்பேடு நாளது வரை ஆக்கப்பட்டு பேணப்பட்டிருக்க வில்லை. |

**2.11 மனிதவள முகாமைத்துவம்**

---

**இணைக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

---

அமைச்சின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணிகள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளுக்குரிய வேதன செலவினத் தொகுதிக்காக ரூபா 120.23 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு ஆளுக்கான செலவு ரூபா 561,837 தொகை ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 26 | 19 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 01 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 238 | 176 | 62 |
| (iv) | ஆரம்ப நிலை | 17 | 14 | 03 |
| (v) | அமைய/ஒப்பந்த | 04 | 04 | - |
| | மொத்தம் | 288 | 214 | 74 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**பதவியணியினருக்கு பயிற்சி வழங்குதல்**

----------------------------------------------------------

அமைச்சின் 214 பதவியணியில் குறைந்தளவு ஒரு வருடத்திற்கு 08 மணித்தியாலங்கள் ஏனும் பயிற்சி வழங்கியிருக்காத உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 195 ஆகும்.